பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 29 திங்கட்கிழமை 15.08.2022 கதிர் 171

## நல்லூரில் சங்கிலி திருடிய பெண் கைது

நல்லூர் ஆலய வளாகத்தில் கைக்குழந்தையுடன் நின்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை அபகரித்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 4 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி கைப்பற்றப்பட்டுள்ளது என்று

☞ 2

## தடை நீக்கத்துக்குக் கூட்டமைப்பு வரவேற்பு

# ஏனைய புலம்பெயர் அமைப்புக்களையும் கறுப்புப்பட்டியலில் இருந்து விலக்குங்கள்



### சம்பந்தன், மாவை, செல்வம், சித்தர் ரணில் அரசிடம் கூட்டாகக் கோரிக்கை

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் சிலவற்றின் மீதும் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசு நீக்கியமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்புத் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களின் பெயர்களையும் கறுப்புப்பட்டியலில் இருந்து இலங்கை அரசு நீக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

☞ 2

## தடை நீக்கக் காரணம் என்ன?

### அரசிடம் விமல் கேள்வி



புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே இந்த அமைப்புக்கள் மீது தடை விதிக்கப்பட்டது. அதனால் தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூற வேண்டும்.

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச வலியுறுத்தினார்.

6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதும், தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடை அரசால் நீக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக

☞ 2



இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றபோது...

## தனிஸ் அலி பிணையில் விடுவிப்பு



காலிமுகத்திடல் போராட்டச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான தனிஸ் அலி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

☞ 2

## சுமந்திரனும் வரவேற்பு



சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து இலங்கை அரசால் நீக்கப்பட்டதை நாங்கள் வரவேற்கின்றோம் – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாதப் பட்டியலில் எஞ்சியிருக்கும் ஏனையவர்கள் கூட பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள்

☞ 2

## இந்தியாவிடமிருந்து முதலாவது உளவு விமானம்



இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றுக் கொள்ளும் இரண்டு டோர்னியர் – 228 கடல்சார் உளவு விமானங்களில் முதலாவது விமானம் இன்று

☞ 2

## மின்வெட்டு நேரம் மீண்டும் அதிகரிப்பு

இன்று முதல் நாளாந்த மின்வெட்டு நேரம் நீடிக்கப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதலாவது

☞ 2

## வாள்வெட்டில் இளைஞர்கள் இருவர் காயம்

யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு இடங்களில் நடந்த வாள்வெட்டுச் சம்பவங்களில் இளைஞர்கள் இருவர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் ஒருவரின் விரல் துண்டாடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் நகரப் பகுதி மற்றும் மாகியப்பிட்டியில் நடந்துள்ளன. மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுக்களே வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளன.

☞ 2

## அரச செலவினங்களை மேலும் கட்டுப்படுத்துமாறு அறிவித்தல்

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, மேலும் அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இது தொடர்பான விசேட சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக திறைசேரி வழங்கிய அறிவுறுத்தல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அரசு அறிவித்துள்ளது.

அதன்படி, அரச அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்களை வாடகைக்கு எடுப்பது அல்லது புதிய குத்தகை

☞ 2

## நான்கு மாதங்களில் மட்டும் யானை தாக்கி 34 பேர் சாவு



இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் மாத்திரம் காட்டு யானைகள் தாக்கி 34 பேர் மரணித்துள்ளனர் என்று விவசாய, வன ஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் 47 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளனர் என்றும் அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இந்தியாவிடமிருந்து முதலாவது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் தரையிறங்கியது.

இந்த விமானத்துக்கு விமான நிலையத்தில் நீர் விசிறி வரவேற்பளிக்கப்பட்டது.

இலங்கைக்கு வருகை தந்த இந்தியக் கடற்படையின் உப தளதிபதி வைஸ் எட்மிரல் சதீஸ் என் கோர்மடே, இந்த விமானத்தை இலங்கை விமானப்படையிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## வாள்வெட்டில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானிப்பாயில் நேற்று மாலை நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மானிப்பாய் நகரப் பகுதியில் உள்ள வணிக நிலையத்தில் பணிபுரியும் தெல்லிப்பழையைச் சேர்ந்த 21 வயது இளைஞரே கையில் வெட்டுக்காயத்துக்கு உள்ளாகியுள்ளார்.

மாலை 6.10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாகியப்பிட்டியில் நேற்றிரவு நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த 27 வயது இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

சூரிய உதயம் சனசமூக நிலையம் அருகில் நின்றிருந்த இளைஞன் மீது 4 மோட்டார்சைக்கிள்களில் வந்த 8 பேர் வாள்வெட்டு தாக்குதலை நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் இளைஞர் படுகாயமடைந்ததுடன், அவரது விரல் துண்டாக்கப்பட்டுள்ளது.

## அரச செலவினங்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது குத்தகை ஒப்பந்தங்களை மேற்கொள்வதை மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்திவைக்கமுடிவுசெய்யப்பட்டுள்ளது.

அரச தேவைகளுக்காக வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தற்போதுள்ள ஒப்பந்தங்களை நீடிப்பதற்கு முன்னர் திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயன்றவரை காகித பாவனையைக் குறைத்துத் தேவையான செயற்பாடுகளை இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகள் ஊடாக மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நான்கு மாதங்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8 மாகாணங்கள் மற்றும் 19 மாவட்டங்களில் உள்ள 131 பிரதேச செயலகப் பிரிவுகளில் யானை மற்றும் மனித மோதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த ஆண்டில் உயிரிழந்த 47 காட்டு யானைகளில், 13 யானைகள் துப்பாக்கிச்சூடு காரணமாகவும், மேலும் 17 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கியும் மரணித்துள்ளன.

கடந்த 3 வருடங்களில் யானை – மனித மோதல்கள் அதிகரித்து வருகின்றன. 2019ஆம் ஆண்டில் 407 யானைகள் உயிரிழந்துள்ளதுடன் 122 பேர் உயிரிழந்துள்ளனர்.

2020 ஆம் ஆண்டில், யானை – மனித மோதலால் 112 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் கடந்த வருடத்தில் யானை – மனித மோதலால் 142 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் விவசாய, வன ஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அநுராதபுரம் – மிகிந்தலைப்பகுதியில் மின்சாரம் தாக்கி நேற்று 3 யானைகள் பலியாகின.

புதுக்குளம் பிரதேசத்தில் உள்ள தனியார் காணியொன்றின் உரிமையாளரால் சட்டவிரோத மின்சார வேலி ஒன்று அமைக்கப்பட்டிருந்த நிலையில், அதில் மோதி குறித்த யானைகள் உயிரிழந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

## மின்வெட்டு நேரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதி மின் உற்பத்தி இயந்திரம் செயலிழந்ததன் காரணமாக மின்வெட்டை நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று முதல் 3 மணித்தியாலங்களுக்குத் தினசரி மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

எவ்வாறாயினும், இன்றும் நாளையும் ஒரு மணி நேரமும் 20 நிமிடங்கள் மட்டுமே மின்வெட்டு அமுலாகும் என்று நேற்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

எனினும், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழப்பு மின்வெட்டு நேர மாற்றத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது.

இன்று காலை நுரைச்சோலை அனல்மின் நிலையம் திடீரென பழுதடைந்ததையடுத்து, நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதலாவது தொகுதி மின்பிறப்பாக்கி செயலிழந்துள்ளது எனவும், தொழில்நுட்ப ஊழியர்கள் தற்போது கோளாறைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளனர் எனவும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை, மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது தொகுதி மின்பிறப்பாக்கியில் சுமார் ஒருமாத காலமாக திட்டமிடப்பட்ட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், அனல்மின் நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கி தொடர்ந்தும் இயங்குகின்றது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், மின்சார விநியோகத்தை நிர்வகிக்க மேற்கு முனையம் மற்றும் பிற எரிபொருள் மின்நிலையங்கள் பயன்படுத்தப்படுகின்றன எனவும் எரிசக்தி அமைச்சர் மேலும் கூறினார்.

## தனிஸ் அலி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் பலவந்தமாக நுழைந்து, ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், கட்டுநாயக்க விலிருந்து டுபாய் செல்லப் புறப்படவிருந்த விமானத்துக்குள் வைத்துக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்த தனிஸ் அலி, விசாரணைகளின் பின்னர் விளக்கமறியிலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், இவருக்குக் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

குறித்தவழக்குஇன்றுவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவரை 25ஆயிரம்ரூபாரொக்கப்பிணையிலும், தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## சுமந்திரனும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லாததுடன் மேலும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றாமல் அவர்கள் அவ்வாறு பெயரிடப்பட்டுள்ளனர் என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

இப்பட்டியலில் பெயரிடப்பட்டிருக்க வேண்டியவர்கள் அல்லாத அனைத்து தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மறுமதிப்பீடு மற்றும் தடை நீக்கம் செய்யும் இந்தச் செயல்முறையை குறைந்த பட்சம் தொடருமாறு நாங்கள் அரசை வலியுறுத்துகின்றோம் – என்றார்.

## தடை நீக்கக் காரணம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது? தடை விதிக்கப்பட்டமைக்குக் காரணங்கள் இருந்தன அல்லவா?. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே இந்த 6 அமைப்புக்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதனால் தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூற வேண்டும்.

இப்போது அந்தத் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் தணிந்துவிட்டதா? அப்படி இல்லாவிட்டால் தடை நீக்கப்பட்டமைக்கு உண்மையான காரணம் என்ன?. அதை அறிந்துகொள்வதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு.

என்ன காரணத்துக்காக 6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் முக்கிய தனிநபர்கள் மீதான தடை நீக்கப்பட்டது என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும். பாதுகாப்பு அமைச்சு தெளிவான அறிவிப்பை வெளியிட வேண்டும்.

தடை செய்யப்பட்டிருந்த அமைப்புக்கள் தங்களது நோக்கங்களைக் கைவிட்டிருக்க வேண்டும் அல்லது அந்த அமைப்புக்களால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்பு இல்லாமல் போயிருக்க வேண்டும். இந்த இரண்டில் எது நடந்தது என்பதை அறியும் உரிமை மக்களுக்கு உள்ளது – என்றார்.

## நல்லூரில் சங்கிலி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர்.

கைக்குழந்தை அழுததை அடுத்து, குழந்தையைப் பார்த்துக் கொள்கின்றேன் என்று கூறிப் பாசாங்கு செய்த பெண் ஒருவர் திடீரென தாயின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளார். சங்கிலியைப் பறிகொடுத்த பெண், இது தொடர்பில் நல்லூர் உற்சவகாலப் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் 39 வயதுப் பெண் ஒருவரைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுக் கைது செய்துள்ளனர். சந்தேகநபரிடம் இருந்து தங்கச் சங்கிலி மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஏனைய புலம்பெயர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிபந்தனைகளின் 1373 இன் கீழ், இலங்கைக்குள் 18 அமைப்புக்களுக்கும், 577 தனிநபர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தடை விதித்தது. இந்நிலையில், இலங்கைக்குள் தடைசெய்யப்பட்ட உலகத் தமிழர் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ், ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் திராவிட ஈழ மக்கள் சம்மேளனம் ஆகிய 6 அமைப்புக்கள் மீதான தடையும், 316 தனிநபர்களுக்குமான தடையும் நீக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:–

### இரா.சம்பந்தன்

இது நல்லதொரு விடயம். அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்கின்றோம். பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கையின் மீள் எழுச்சிக்குப் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியம். இதனை உணர்ந்து சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளினதும், தனிநபர்களினதும் தடையை இலங்கை அரசு நீக்கியுள்ளது.

நாட்டின் நலன் கருதி அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கையை வரவேற்கின்றோம். அதேவேளை, தொடர்ந்தும் தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பிலும் ரணில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களுடன் இலங்கை அரசு நெருக்கமாகப் பேசி நாட்டுக்காக அவர்களின் உதவிகளைப் பெற வேண்டும்–என்றுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

### மாவை சேனாதிராஜா

பொதுவாக இது நல்ல செய்தி என்றுதான் நாங்கள் எண்ணுகின்றோம். பொருளாதார ரீதியாக உதவிகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளார் என்று நாங்கள் எண்ணலாம். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை ரணில் அரசு வழங்க முன்வந்தால்தான் அவர்கள் எதிர்பார்க்கின்ற புலம்பெயர் தமிழர்களுடைய முதலீடுகளும், பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான உதவிகளும் கிடைக்கும் என்று கருத வேண்டும். அதேவேளை, ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது தொடரும் தடையையும் நீக்க ரணில் அரசு முன்வரவேண்டும் – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான இலங்கைத்தமிழரசுக்கட்சியின் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

### செல்வம் அடைக்கலநாதன்

சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளமையை வரவேற்கின்றோம்.

இன்னும் பல புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தனிநபர்களின் பெயர்களும் தடைசெய்யப்பட்ட பட்டியலிலேயே காணப்படுகின்றன. அந்தத் தடையையும் நீக்குமாறு நாம் ரணில் அரசிடம் கோருகின்றோம்.

முதலீடு செய்யத் தயாராக இருக்கும் புலம்பெயர் உறவுகள் அச்சமின்றி தங்கள் முதலீடுகளை செய்வதற்கு இந்தத் தடையை நீக்குவது அவசியமாகும்.

(03ஆம் பக்கம் பார்க்க)


## இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்ச்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்ச்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் ( welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விபரங்கள் அறிய

jananayakam.associatesgmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொருத்தமேயற்ற பதில்

'வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு என்டானாம்' என்ற கதை மாதிரி இருக்கின்றது இலங்கை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் பேச்சு.

வருகின்ற மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு நெருக்கடி காத்திருக்கின்றது என்பது வெளிப்படையானது.

அதை எதிர்கொண்டு சமாளிக்க விசேட பொறிமுறை கைவசம் இருப்பதாகக் கயிறு விட்டிருக்கின்றார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ.

அந்தப் பொறிமுறை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே 'வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு' என்று விலை கூறுவது போல விவரித்து இருக்கின்றார் நீதி அமைச்சர்.

யுத்த காலத்தில் இலங்கைப் படைகள் புரிந்தவை என்று கூறப்படும் யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவாக விசாரணைகளை நடத்தி, உண்மைகளை கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலை நாட்ட வேண்டும் என்பது ஜெனிவா மன்றத்தின் இலங்கை தொடர்பான எதிர்பார்ப்பின் பிரதான விடயமாகும்.

பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்பும்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடயம், இராணுவ ஆக்கிரமிப்பு, காணிகள் விடுவிப்பு எல்லாம் இவற்றுக்குள் அடங்கும்.

புதிதாக இன்னொரு விடயமும் வந்திருக்கிறது. ராஜபக்ஷக்களின் கொடூர ஆட்சிப் பீடத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தை அடக்குவதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் புதியஅரசுஎடுத்திருக்கும்அடக்குமுறைநடவடிக்கைகளும் தற்போது ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீவிரக் கவனிப்புக்கும் கண்காணிப்புக்கும் உரியதாகி இருக்கின்றது என்பது பிந்திய தகவல்.

இந்த விடயங்களை ஒட்டித் தெளிவாக இம்முறை எழக்கூடிய நெருக்கடிகள், அழுத்தங்களை இலங்கை எப்படி எதிர்கொண்டு சமாளிக்க போகிறது என்பதுதான் இங்கு முக்கிய கேள்வி.

விசேட பொறி முறை இருக்கின்றது என்று சளாப்பும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அவற்றுக்குரிய பதிலாக 22 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் குறித்தும் பெரிய விடயமாகக் காட்டுகிறார்.

நிறைவேற்றுஅதிகாரஜனாதிபதியின்அதிகாரங்களைக் கணிசமாக வெட்டி குறைத்து, அவற்றை நாடாளுமன்றுக்குக் கையளிப்பது பற்றியதே 22 ஆவது அரசமைப்பு திருத்தம்.

ஜெனிவாவில் சர்ச்சைக்குரியதாக – பற்றி எரியும் கொதிநிலைப் பிரச்சினையாக முன்வைக்கப்படும் விடயங்களுக்கும் இந்த 22 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கும் பெரிய சம்பந்தம் ஏதும் கிடையாது.

ஆக, ஜெனிவாவைச் சமாளிக்கும் திட்டத்தில் அல்லது அதற்கு அரசு வைத்திருப்பதாகக் கூறப்படும் விசேட பொறி முறையில் 22 ஆவது திருத்தம் பற்றிய விவகாரமும் பிரஸ்தாபிக்கப்படும் என்றால், அது வட்டுக்கோட்டைக்கு வழி துட்டுக்கு ரெண்டு கொட்டைப்பாக்கு என்ற கதையாகத்தான் இருக்கும்.

யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து – 2009 செப்டம்பர் அமர்வில் இருந்து – கடந்த 13 ஆண்டுகளாக ஜெனிவா சுட்டிக் காட்டும் பிரதான பிரச்சினைகளைப் புரியாத மாதிரி நடிக்கின்றது கொழும்பு. அதன் ஓர் அம்சம்தான் இப்போதைய நீதி அமைச்சரின் இந்தச் சளாப்பலும்.

# பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வை ஜனாதிபதி இன்னமும் முன்வைக்கவில்லை!

## ஹர்ஷ டி சில்வா காட்டம்



புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு குறிப்பிடத்தக்க காலம் கடந்துள்ள நிலையில், நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பது தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு இன்னும் வேலைத்திட்டத்தை முன்வைக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதியின் அக்கிராசன உரையில் ஒரு வரையறைக் கொள்கைகளை முன்வைத்திருந்தாலும் என்ன செய்ய வேண்டும்?. யார் செய்ய வேண்டும் என்பது சம்பந்தமாக இதுவரை எவருக்கும் தெளிவுபடுத்தப்படவில்லை.

இதனால், கடன் பொறியில் இருந்து மீளப் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இடைக்கால நிரந்தர அபிவிருத்திக்கான திட்டத்தை முன்வைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

பொருளாதாரத்தைக் குறுகிய காலத்துக்குக் கட்டியெழுப்புவதற்கு எதிர்க்கட்சி 10 விடயங்கள் அடங்கிய பொது வேலைத்திட்டத்தை அரசாங்கத்துக்கு முன்வைத்துள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைப்பு ரீதியான மாற்றத்தை எதிர்பார்த்த போது அப்படியான எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ராஜபக்ஷவினரின் ஆவிகள் ஊடாக அரசாங்கம் சேவைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

அதேவேளை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு முதல் முறையாக நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் பதவியை வழங்கியமை தொடர்பாக மகிழ்ச்சியடைக்கின்றேன்.

இதன் ஊடாகத் தேவையான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த நான் நடவடிக்கை எடுப்பேன். நாட்டைக் கட்டியெழுப்ப அமைச்சராக வேண்டும் என்ற தேவையில்லை என்பதை இந்தப் பதவியின் மூலம் ஒப்புவித்துக் காட்ட எதிர்பார்த்துள்ளேன். மேலும் தற்போதைய நாடாளுமன்றம் உண்மையாக மக்களின் ஆணையைப் பிரதிபலிக்கவில்லை. உண்மையான மக்களின் ஆணையைப் பிரதிபலிக்கும் நாடாளுமன்றம் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குப் பின்னர் தெரிவு செய்யப்படும் வரை இந்தப் பங்களிப்பை வழங்குவேன் எனவும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

# யாழ். நல்லூர் ஆலய வாகன பாதுகாப்பு நிலையத்துக்கு சீல்!

யாழ். நல்லூர் ஆலய சூழலில் உள்ள வாகன பாதுகாப்பு நிலையத்தில் யாழ். மாநகர சபையால் அனுமதிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் அறவிட்ட வாகனப் பாதுகாப்பு நிலையம் மாநகர அதிகாரிகளால் மூடப்பட்டுள்ளது.

நல்லூர் கோவில் உற்சவகாலத்தில் பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் பக்தர்களிடம் இருந்து அதிக பணம் அறவிடப்படுவதாக யாழ்.மாநகர சபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம் அதிகாரிகள் உரிய முறையில் கண்காணித்து மேற்படி விடயம் உண்மை என உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து அந்த வாகனப் பாதுகாப்பு நிலையம் யாழ்.மாநகர சபையால் அறிவிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் அறவிட்டமையால் யாழ்.மாநகர சபையால் பூட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய சைக்கிள்களுக்கு 20 ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 30 ரூபாவும் ஓட்டோ மற்றும் கார் ஆகியவற்றுக்கு 50 ரூபாவும் வானுக்கு 100 ரூபா எனவும் யாழ்.மாநகர சபையால் கட்டண விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்ணய கட்டணங்களுக்கு அதிகமான கட்டணங்களை அறவிடுதல் மற்றும் மாநகர சபையின் அங்கீகாரம் பெறாத ரசீதுகளை வழங்குதல் ஆகியவை கண்டறியப்பட்டால் வாகனப் பாதுகாப்பு நிலையங்கள் உடன் மூடப்படும் என்று யாழ்.மாநகர சபை எச்சரித்துள்ளது.

## ஏனைய புலம்பெயர் .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதைக் கருத்தில்கொண்டு ஏனைய புலம்பெயர் அமைப்புகளையும் தனிநபர்களின் பெயர்களையும் தடைப்பட்டியலில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றோம் – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியானரெலோவின்தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

### தர்மலிங்கம் சித்தார்த்தன்

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பலர் மீதான தடையை கடந்த நல்லாட்சி அரசு நீக்கியிருந்தது. பின்னர் ஆட்சிக்கு வந்த கோட்டாபய அரசு, மீண்டும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது தடையை விதித்திருந்தது.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தத் தடையை நீக்கியுள்ளார். எல்லோருக்கும் இல்லாவிடினும் சில முக்கிய அமைப்புக்கள் மற்றும் முக்கிய நபர்கள் சிலர் மீதான தடையை ரணில் அரசு நீக்கியுள்ளது. இதை நாம் வரவேற்கின்றோம்.

சில அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடை இன்னமும் தொடர்கின்றது. இதனை ரணில் அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களுடைய முதலீடுகளும், உதவிகளும் இலங்கைக்கு வர வேண்டும் என்று ரணில் அரசு எதிர்பார்க்கின்றது. ஆகவே, புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்கள் அல்லது அங்கு அமைப்புக்களூடாக மக்களுடன் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள் தடையில் இருந்தால் தாம் எதிர்பார்க்கும் காரியங்கள் நடக்காது என்ற காரணத்தால் இந்தத் தடையை ரணில் அரசு நீக்கியுள்ளது – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

# ஞாயிறு வழிபாட்டு வேளை எரிந்த தேவாலயம் கெய்ரோவில் 41 பேர் மரணம்; 14 பேர் காயம்!







வடகிழக்கு ஆப்ரிக்க நாடான எகிப்தின் தலைநகர் கெய்ரோவின் புறநகர் பகுதியில் உள்ள தேவாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வழிபாட்டு நேரத்தில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில், பத்து சிறுவர்கள் உட்பட 41 பேர் உயிரிழந்தனர்; 14 பேர் காயம் அடைந்தனர்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக உள்ள எகிப்தின் மக்கள் தொகையில் கிறிஸ்துவர்கள், 10 சதவீதம் உள்ளனர். தலைநகர் கெய்ரோவின் புறநகரில் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் 'காப்டிக்' கிறிஸ்தவர்களின் தேவாலயம் ஒன்று உள்ளது.

இங்கு நேற்றுக் காலையில் அதிகமானோர் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். அப்போது திடீரென அந்தத் தேவாலயத்தில் தீவிபத்து ஏற்பட்டது; அது, மிக வேகமாக பரவியது. உடனடியாக, பதினைந்துக்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணி நடந்தது. தீயணைப்பு வீரர்கள், பொலிஸார் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். தேவாலயத்தில் சிக்கியவர்களை மீட்டு, அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மின் கசிவு காரணமாக இந்த விபத்து நடந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

காப்டிக் கிறிஸ்துவர்களின் தலைவரான போப் இரண்டாம் தவாட்ரோஸ்ஸுடன், அந்த நாட்டின் அதிபர் அப்துல் பதேஹ் எல்சிசி, தொலைபேசி வாயிலாக பேசினார். மீட்பு நடவடிக்கைகள் குறித்து அவர் விளக்கினார் எனஜ் கூறப்படுகிறது.

கட்டடங்களின் பாதுகாப்பு மற்றும் தீத்தடுப்பு நடவடிக்கைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ள எகிப்தில், அடிக்கடி தீவிபத்து சம்பவங்கள் நடக்கின்றன. கடந்த ஆண்டு மார்ச்சில், ஆயத்த ஆடை ஆலையில் நடந்த விபத்தில், 20 பேர் உயிரிழந்தனர்; 24 பேர் காயம்அடைந்தனர்.

# கத்தியால் குத்தப்பட்ட ருஷ்டி சல்மான் ருஷ்டி தேறுகிறார்

அமெரிக்காவில் கத்திக் குத்தில் பலத்த காயம் அடைந்த, எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு, 'வென்டிலேட்டர்' அகற்றப்பட்டது. பேசும் நிலைக்கு அவரது உடல்நிலை முன்னேற்றம் அடைந்துள்ளது.

இந்தியாவில் மஹாராஷ்டிர மாநில தலைநகர் மும்பையில் பிறந்தவர், பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி( வயது 75)ழ் இவர் எழுதிய, 'த சட்டானிக் வெர்ஸஸ்' (சாத்தானின் வேதங்கள்) என்ற புத்தகம், முஸ்லிம்களின் மனதை புண்படுத்துவதாகக் கூறி, உலகின் பல இடங்களிலும் போராட்டங்கள் நடந்தன. இந்தப் புத்தகம் 1988 இல் ஈரானில் தடை செய்யப்பட்டது. பின், பல இஸ்லாமிய நாடுகளிலும் தடை செய்யப்பட்டது. 'ருஷ்டியை கொன்றால், 26 கோடி ரூபாய் பரிசு வழங்கப்படும்' என ஈரானின் மறைந்த தலைவர் அயதுல்லா கொமேனி அப்போது அறிவித்திருந்தார்.

இதையடுத்து ஐரோப்பிய நாடான பிரிட்டனில், 10 ஆண்டுகள் பொலிஸ் பாதுகாப்புடன் இருந்தார் ருஷ்டி. பிறகு தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்தார். கடந்த 2000 ஆம் ஆண்டில் அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்தார். இந்நிலையில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில், சல்மான் ருஷ்டி பங்கேற்றார். அப்போது, நியூ ஜெர்சியைச் சேர்ந்த ஹாரி மட்டார் ( வயது 24) என்பவர் மேடைக்குச் சென்று சல்மான் ருஷ்டியை கத்தியால் சரமாரியாகக் குத்தினார்.

கழுத்து மற்றும் வயிற்றில் கத்தியால் பலமாக குத்தப்பட்டு இருந்தது. தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட ருஷ்டி, அபாய கட்டத்தில் இருக்கிறார் எனவும், பார்வை பறிபோக வாய்ப்புள்ளதாகவும் டாக்டர்கள் கூறியிருந்தனர். இந்நிலையில் நேற்று, ருஷ்டிக்கு பொருத்தப்பட்டு இருந்த வென்டிலேட்டர் எனப்படும் செயற்கை சுவாச கருவி அகற்றப்பட்டது. பேசும் நிலைக்கு அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் அவர் தீவிர சிகிச்சைப் பிரிவிலேயே கண்காணிக்கப்பட்டு வருகிறார்.

# இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் சிரியாவின் 3 இராணுவ வீரர்கள் சாவு

இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் சிரியாவின் 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தும் 3 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

சிரியா நாட்டில் கிளர்ச்சியாளர்கள் அரசுக்கு எதிரான போரில் ஈடுபட்டு வருகின்றனர். பல ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த போரால் பெண்கள், குழந்தைகள் உள்பட அந்நாட்டின் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனினும், போர் முடிவுக்கு வராமல் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், சிரியாவின் சனா செய்தி நிறுவனம் வெளியிட்டு உள்ள செய்தியில், எதிரி நாடான இஸ்ரேல் வான்வழியே நடத்திய ஏவுகணை தாக்குதல் டமாஸ்கஸ் நகரில் சில பகுதிகளை இலக்காக கொண்டிருந்தது. இதற்கு பெய்ரூட்டின் தென்கிழக்கு வான்வழி பகுதியை இஸ்ரேல் பயன்படுத்தி உள்ளது. இதேபோன்று, தெற்கு டார்டவுஸ் நகரின் சில பகுதிகளை இலக்காக கொண்டும் தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இதற்கு மத்திய தரைக்கடல் பகுதியின் வான்வழி பயன்படுத்தப்பட்டு உள்ளது என தெரிவித்து உள்ளது. இதனை தொடர்ந்து, சிரிய வான்வழி பாதுகாப்பு அமைப்பு, அந்த தாக்குதல்களை எதிர் கொண்டு சில ஏவுகணைகளை வீழ்த்தியது. இதில், 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்து உள்ளனர். பொருள்களும் சேதமடைந்து உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.



# தைவான் விவகாரத்தில் இந்திய ஆதரவை சீனா நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறதாம்!



தைவான் விவகாரத்தில் சீனாவின் நிலைப்பாட்டை இந்திய அரசு ஆதரிக்கும் என்று நம்பிக்கையுடன் இருப்பதாக இந்தியாவுக்கான சீன தூதர் சன் வெய்டாங் தெரிவித்தார்.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசியின் சமீபத்திய தைவான் பயணம் ஓர் ஆபத்தான அரசியல் ஆத்திரமூட்டல் நிகழ்வு என்று சீன தூதர் கண்டித்தார்.

தைவான் விவகாரம் குறித்து இந்தியாவின் ஆதரவை கோரிய அவர் கூறியவை வருமாறு:- அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசியின் சமீபத்திய தைவான் பயணம், ஓர் ஆபத்தான அரசியல் ஆத்திரமூட்டலாகும், இது சீனாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைத் தீவிரமாக மீறிய செயலாகும். மேலும், இது ஒரே சீனா என்ற கொள்கையையும், சீனா-அமெரிக்க கூட்டு அறிக்கைகளில் உள்ள விதிகளையும் மீறிய செயலாகும்.

தோல்வியை ஏற்கத் தயாராக இல்லாத அமெரிக்கா, மற்றவர்களுடன் சேர்ந்து இந்த விவகாரத்தில் நெருப்பை மூட்டி உள்ளது என்பதில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். ஒரு புதிய மற்றும் இன்னும் பெரிய நெருக்கடியை உருவாக்கும் முயற்சியில் தைவான் பிராந்தியத்தில் இராணுவ நிலைநிறுத்தத்தை அமெரிக்க அதிகரிக்கலாம் மற்றும் நிலைமையை மேலும் தீவிரமாக்கலாம்.

தைவான் விவகாரங்கள் மற்றும் சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்துமாறு அமெரிக்காவை சீனா கேட்டுக் கொண்டது. நாங்கள் எங்கள் சொந்த இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாத்து வருகிறோம். இது சட்டபூர்வமானது மற்றும் நியாயமானது.

ஒரே சீனா என்ற கொள்கையே சீன-இந்திய உறவுகளின் அரசியல் அடித்தளமாகும். ஒரே சீனா என்ற கொள்கையை முதலில் அங்கீகரித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. 1971 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவின் சட்டபூர்வமான இடத்தை மீட்டெடுப்பதற்கு சீனக் குடியரசுக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது. இந்திய தரப்பின் நிலையை சீனத் தரப்பு பாராட்டுகிறது.

இந்தியத் தரப்பு ஒரு சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை கடைபிடிக்க முடியும். சீனாவின் நியாயமான நிலைப்பாட்டை புரிந்துகொண்டு ஆதரிக்க முடியும் என்று சீனா நம்பிக்கையுடன் உள்ளது - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கோட்டைக் கொத்தளத்தில் கொடி ஏற்றினார் ஸ்டாலின்





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றினார்.

இந்தியா சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. நாட்டின் 76 ஆவது சுதந்திர தினம், சுதந்திர திருநாள் இன்று உற்சாகத்துடனும், கோலாகலத்துடனும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நாட்டின் சுதந்திரதின விழாவையொட்டி சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியத் தேசியக்கொடியை ஏற்றினார்.

பொலிஸ் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்ஏற்றுக்கொண்டார். கோட்டை கொத்தளத்தில் 2 ஆவது ஆண்டாக தேசியக்கொடியை ஏற்றும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியுள்ளது.

## இந்திய இராணுவ வீரரின் உடல் 38 ஆண்டுகளுக்குப் பின் மீட்பு!





புதுடெல்லி,ஓக.15

சியாச்சின் பகுதியில் வீர மரணமடைந்த இந்திய இராணுவ வீரரின் உடல், 38 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

லான்ஸ் நாயக் சந்திர சேகர் என்ர வீரரின் எலும்புக்கூடுகள் நேற்று முன்தினம் ஓகஸ்ட் 13 அன்று சியாச்சினில் 16,000 அடி உயரத்தில் உள்ள ஒரு பழைய பதுங்கு குழியில் கண்டெடுக்கப்பட்டன.

1984 ஆம் ஆண்டு சியாச்சின் ஒபரேன் மேக்தூத்-இன் ஒரு பகுதியாக இருந்த சந்திர சேகர், பாயிண்ட் 5965ஐக் கைப்பற்றும்பணிவழங்கப்பட்ட ராணுவ குழுவில் இருந்தார். இந்த பகுதியானது, பாகிஸ்தானியர்கள் கைப்பற்ற நினைத்த முக்கிய பகுதியாக இருந்தது. இதற்காக சியாச்சின் பனிப்பாறை பகுதிகளுக்கு 19 குமாவோன் படைப்பிரிவைச் சேர்ந்த ஓர் இராணுவக் குழு உடனடியாக அனுப்பப்பட்டது.

மே 29, 1984இல் நடந்த சியாச்சின் ஒபரேன் மேக்தூத்தின் முதல் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். அங்கு பாதுகாப்பு பணியில் இராணுவ வீரர்கள் நின்று கொண்டிருந்த போது, இரவுதிடீரென்று ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 18 இந்திய இராணுவவீரர்கள்பலியாகினர்.

அதில் உயிரிழந்த 14 பேரின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்ட நிலையில், ஐந்து பேரைக் காணவில்லை. இந்நிலையில், கோடை மாதங்களில், பனி உருகும்போது, காணாமல் போன வீரர்களைக் கண்டறிய ரோந்து பணி மேற்கொள்ளப்படுகிறது. அப்போது தான் இம்மாதம் சியாச்சின் பனிப்பாறையில் உள்ள பழைய பதுங்கு குழிக்குள் வீரர் சந்திரசேகரின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த உடல் யாருடையது என்பதை அடையாளம் காண, அவரது சடலத்துடன் கண்டு பிடிக்கப்பட்ட இராணுவ எண் கொண்ட வட்டு உதவியது.

இதன்மூலம், லான்ஸ் நாயக் சந்திர சேகர் அடையாளம் காணப்பட்டார். சந்திரசேகரின் மனைவி( வயது 65) மற்றும் இரண்டு மகள்கள் ஆகியோரின் 38 ஆண்டுகளாக நீண்ட காத்திருப்புக்கு பலன் கிடைத்துள்ளது. அவர் பலியானபோது அவருடைய இளைய மகளுக்கு நான்கு வயதும் மூத்தவளுக்கு எட்டு வயதும் ஆகும்.

இதனைத் தொடர்ந்து, அவரது சொந்த ஊரான ஹல்த்வானியில் அவரது உடல் அஞ்சலி செலுத்துவதற்காக கொண்டு செல்லப்படுகிறது. அங்கு அவருக்கு இறுதி அஞ்சலிசெலுத்தப்பட்டுராணுவ மரியாதையுடன் உடல் தகனம் செய்யப்படும். இந்தியாவின் 75வது ஆண்டு சுதந்திர தினத்தில் 38 ஆண்டுகளுக்கு முன் உயிர்நீத்த ராணுவ வீரரின்உடல்கண்டுபிடிக்கப்பட்டுள்ள மெனஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.







## செங்கோட்டையில் தேசியக்கொடி பிரதமர் நரேந்திர மோடி ஏற்றினார்

டெல்லி செங்கோட்டையில் இந்தியத் தேசியக் கொடியைப் பிரதமர் நரேந்திர மோடி ஏற்றினார். இந்தியா சுதந்திரம் பெற்றும் 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. நாட்டின் 76 ஆவது சுதந்திரதினம், சுதந்திர திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

சுதந்திர தினத்தின் முக்கிய நிகழ்வாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி டெல்லி செங்கோட்டையில் இந்திய தேசியக்கொடியை ஏற்றினார்.

2014 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 9 ஆவது முறையாக பிரதமர் நரேந்திரமோடி டெல்லி செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றினார்.

இதனைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது. முன்னதாக, டெல்லி செங்கோட்டைக்கு வந்த பிரதமர் மோடி முப்படைகளின் சார்பில் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றிய பின்னர் விமானப்படை ஹெலிக்கொப்டர் மூலம் தேசியக்கொடி மீது மலர்களை தூவி அவர் மரியாதை செலுத்தினர்.

## அ.தி.மு.க. பொதுக்குழு வழக்கில் நாளை தீர்ப்பு வெளியாகிறது?

அ.தி.மு.கவில் ஒற்றை தலைமை விவகாரம் காரணமாக எடப்பாடி பழனிசாமிக்கும், ஓ.பன்னீர் செல்வத்துக்கும் இடையே விரிசல் ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் 11ம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் கட்சியின் இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார். ஓ.பன்னீர்செல்வத்தை நீக்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது போன்ற பொதுக்குழு முடிவுகளுக்கு எதிராக ஓ.பன்னீர் செல்வம் தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இதனை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு பொதுக்குழு தொடர்பான வழக்கை மீண்டும் விசாரணை நடத்த அறிவுறுத்தியது. இதன்படி வழக்கு விசாரணை கடந்த வாரம் 2 நாட்கள் நடைபெற்றது. கடந்த 11ம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது இருதரப்பு வக்கீல்களும் கார சாரமாக தங்கள் தரப்பு வாதங்களை எடுத்து வைத்தனர். இதனை கேட்ட நீதிபதி ஜெயச்சந்திரன் வழக்கின் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தார்.



இந்த நிலையில் அ.தி.மு.க. பொதுக்குழுதொடர்பான வழக்கில் நாளை தீர்ப்பு வெளியாகவாய்ப்புஉள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. நாளை வழக்கு விசாரணை பட்டியலில் பொதுக்குழு தொடர்பான வழக்கு இடம்பெறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இதையொட்டி எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர் செல்வம் தரப்பை சேர்ந்த அ.தி.மு.க. முன்னணி நிர்வாகிகள், தொண்டர்கள் திக், திக் மன நிலையுடன் காத்திருக்கின்றனர். எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டது செல்லுமா? என்பது நாளை தெரியவரும் என்பதில் அவரது ஆதரவாளர்கள் மிகுந்த எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான சட்ட போராட்டத்தில் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாகவே ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பிக்க வாய்ப்புள்ளது என்று அவரது ஆதரவாளர்கள் நம்பிக்கை தெரிவித்து உள்ளனர்.

கடந்த மாதம் 11ம் திகதி அ.தி.மு.க. பொதுக்குழுவுக்கு எதிரான வழக்கில் நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி அளித்த தீர்ப்பில் பொதுக் குழுவுக்கு தடை விதிக்க முடியாது என்று கூறி இருந்தார்.

ஓ.பன்னீர் செல்வம் தரப்பில் தொடரப்பட்ட வழக்கிலேயே அந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

இந்த நிலையில் தான் பொதுக் குழுவுக்கு எதிராக ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் தொடர்ந்த வழக்கில் நீதிபதி மாற்றம் செய்யப்பட்டு நாளை தீர்ப்பு வெளியாக இருக்கிறது. இதனால் அரசியல் களத்திலும் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் படைப்புக்களின் வெளியீட்டு நிகழ்வு







(பைஸல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ், சிங்கள எழுத்தாளர்களின் படைப்புக்கள் மற்றும் அவர்களின் திறமைகளை வெளியுலகிற்கு கொண்டு வருகின்ற செயற்பாடுகளில்மாகாணபண்பாட்டாலுவல்கள்திணைக் களம் கடந்த பல வருடங்களாக பாரிய பங்காற்றி வருகின்றதென கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தினால் அச்சுருவாக்கப்பட்ட 4 வகை நூல்களை வெளியீட்டு வைக்கும் விழாவும், அந்த நூல்களை நூலாசிரியர்களிடம் கையளித்து வைக்கும் நிகழ்வும் நேற்று திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மூவின மக்களும் வாழுகின்ற பிரதேசமாக இருக்கின்றது. அவர்களுக்குள் இருக்கின்ற படைப்புக்கள் மற்றும் கலை, கலாசார விடயங்களை வெளியுலகிற்கு கொண்டு செல்வதுடன் நின்றுவிடாமல் அவர்களையும், இளம் எழுத்தாளர்களையும் இன்னுமின்னும் ஊக்குவிக்கும் செயற்பாடுகளை மாகாண திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

மாகாணத்திலுள்ள படைப்பாளிகளினால் சமர்ப் பிக்கப்படுகின்ற படைப்புக்கள் யாவும் அதற்கான குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, அதில் திறமையான படைப்புக்கள் இனங்கண்டு இவ்வாறு வெளியீடு செய்து படைப்பாளிகளுக்கும் நூல்களை வழங்கிவருகின்றோம். இதன் மூலம் அவர்கள் இன்னும் பல படைப்புக்களை வெளிக்கொண்டு வருகின்ற ஊக்கத்தையும், இளம் எழுத்தாளர்களின் ஆர்வத்தையும் ஏற்படுத்துகின்றோம்.

– என்றார். இதன்போது, கலாபூசணம் பி.கனகரத்தினம் எழுதிய 'அம்மாவுக்கு பிடித்த கனி' என்ற சிறுவர் பாடல் கள், வைத்தியர் த.ஜீவராஜ்'எழுதிய 'கொட்டியாரப்பற்று வன்னிபங்கள்' என்ற வரலாற்றுக் கட்டுரைத் தொகுப்பு, கவிச்சுடர் திருமதி க.சிவரமணி எழுதிய 'நவீன சீதை' என்ற சிறுவர் கதைகள், ஏ.எம்.முகைதீன் எழுதிய 'கடலோரப்பாதை' என்ற சிறுவர் கதைகள் ஆகியோரின் நூல்கள் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அச்சுருவாக்கப்பட்டு வெளியீடு செய்யப்பட்டன. அவற்றை எழுதியவர்களுக்கு தலா 200 நூல்களையும் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத் திற்கு மிக அண்மையில் நியமனம் பெற்ற மாகாணப் பணிப் பாளர் இவ்விழாவின்போது பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டுநகரில் மீட்கப்பட்ட சடலம்; மரணம் தொடர்பில் 2 பேர் கைது



மட்டக்களப்பு நகரில் ஆண் ஒருவர் வீதி ஓரத்தில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தில் அவரைப் பொல்லால் தாக்கியவர்கள் என்று கூறப்படும் இரு இளைஞர்களை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் நாங்கள் கைது செய்துள்ளனர் என மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முனைத்தீவைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 53 வயதுடைய வல்லிபுரம் அன்பழகன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த 11 ஆம்திகதி மட்டுநகர் லொயிஸ் அவனியூவில் உள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றிற்கு அருகில் வீதி ஓரத்தில் உயிரிழந்த நிலையில் ஆண் ஒருவர் அடையாளம் காணப்படாத நிலையில் மீட்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து 12 ஆம் திகதி சடலத்தை அவரது மனைவி அடையாளம் காட்டினார். இந்தச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, சி.சி.ரி.வி. கமரா ஒன்றைச் சோதனையிட்டபோது அதில் உயிரிழந்தவரை இருவர் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்து இரு தடவைகள் பொல்லால் தாக்கும் காட்சிகள் பதிவாகி இருந்தன.

இதனையடுத்து சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து 22, 21 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

உயிரிழந்தவர் மது போதைக்கு அடிமையாகி, மனைவியை விட்டுப் பிரிந்து, அவரது தாயாருடன் வாழ்ந்து வந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், மது அருந்திவிட்டு வீதிக்கு அருகில் நிர்வாணமாக இந்த நபர் கிடந்துள்ளதைப் பார்த்த இளைஞர்கள் இருவர் அவரை திருத்தும் நோக்கில் இவ்வாறு தாக்கியுள்ளனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், சடலமாக மீட்கப்பட்டவரின் பிரேத பரிசோதனை இன்று இடம்பெற இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சாய்ந்தமருதில் மையவாடி சிரமதானத்தினால் சுத்தம்





(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது 'ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் நண்பர்கள் வட்டம்' அமைப்பினால் சாய்ந்தமருது தக்வா ஜும்மா பள்ளிவாசலுக்கு சொந்தமான மையவாடியை சுத்தம் செய்யும் வேலைத் திட்டமொன்று நேற்று அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் லாபீர் சிப்னாஸ் தலைமையில் முன்னெடுக் கப்பட்டது.

பற்றைக்காடாக வளர்ந்திருந்த சிறிய மரங்கள், புற்கள் வெட்டி அகற்றப்பட்டன.

சிரமதானப் பணியில் சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் நண்பர்கள் வட்டம் மற்றும் அமைப்பின் உறுப்பி னர்கள், சமூக நலன் விரும்பிகள், சாய்ந்தமருது நடுத்துறை மீனவர் சங்கத்தி னர்கள், பொது மக் கள் எனப் பலரும் பங்கேற் றனர்.

## போதைப்பொருள் விநியோகத்தர் காத்தான்குடிப் பகுதியில் கைது!

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள விக்டரி மைதானத்தின் அருகில் வைத்து ஹெரோய்ன் போதைப்பொருளை விற்பனை செய்து கொண்டிருந்த வியாபாரியொருவர், களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினரால் நேற்று முந்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 6 கிராமும் 690 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருளை விற்பனை செய்ததில் கிடைத்த 21,000 ரூபா பணம் என்பவற்றையும் தாங்கள் மீட்டுள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து, பொறுப்பதிகாரி ஐ.பி.தென்னக்கோன் தலைமையிலான களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினர் விசேட சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போதே மேற்படி குறித்த போதைப்பொருள் வியாபாரி கைது செய்யப்பட்டு, காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# மாணவர்களுக்கு பகுதிநேர வேலை வாய்ப்பு பாடசாலை இடைவிலகலை அதிகரிக்குமாம்!

## இலங்கை அரசாங்க ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை



இலங்கையில் பாடசாலை மாணவர்களைத் தனியார் துறைகளில் தொழில் புரிவதற்கு இடமளித்தால் மாணவர்கள் பாடசாலைகளை விட்டு இடைவிலகும் தொகை அதிகரிக்கும் அதேவேளை சிறுவர் தொழிலாளர்கள் உருவாகும் நிலையும் ஏற்படும் என இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கத்தின் உப தலைவர் ஜீவராசா ருபேன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இலங்கை அரசாங்க ஆசிரியர்கள் சங்கத்தின் உப தலைவர் ஜீவராசா ருபேன் மட்டக்களப்பில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையிலே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரி விக்கையில் –

அண்மையில் பாடசாலை மாணவர்கள் தனியார் துறைகளில் மாதாந்தம் 20 மணிநேரம் தொழில் புரிவதற்கு இடமளிக்க வேண்டுமெனவும் ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதாகவும் தொழில் அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பல கருத்துக்கள் பலராலும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசாங்க ஆசிரியர் சங்கத்தின் இது தொடர்பான நிலைப்பாடு என்னவெனில், ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டால் அது எவ்வாறு நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற ஒரு வழிமுறை அல்லது திட்டமிடல் இருப்பது அவசியம் ஆகும். மாணவர்கள் எவ்வாறான நிறுவனங்களில் வேலைக்குச் செல்ல வேண்டும், எவ்வாறான வேலையை எத்தனை மணித்தியாலம் செய்ய வேண்டும், எந்த நேரத்தில் வேலைக்கு செல்ல வேண்டும் மற்றும் இவர்களுக்கு எவ்வாறு சம்பளம் வழங்கப்பட வேண்டும் போன்ற விடயங்கள் எவையும் இன்றியே இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய சூழலில் பலர் பொருளாதார ரீதியாகப் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். எனவே மாணவர்கள் பணத்தைக் கையில் பெற்றுக் கொண்டதன் பின்னர், அதற்கு ஈர்க்கப்பட்டு முற்றாக முழுநேர வேலையில் ஈடுபடுவதற்குத் தம்மைத் தயார்ப்படுத்த அதிக வாய்ப்புகள் உள்ளன.

இன்றைய சூழலில் பொருளாதார நிலைமையைச் சீர்செய்ய தங்கள் குடும்ப சுமைகளைக் கையில் எடுத்துக் கொண்டுள்ள பல சிறுவர்கள் இருக்கிறார்கள். இவ்வாறான சிறுவர்கள் பயன்பெறும்வகையில் ஒருகட்டுக்கோப்பு இருத்தல் வேண்டும்.

இல்லையேல் கல்வியில் இடைவிலகும் மாணவர்கள் தொகை அதிகரிப்பதோடு குறைந்த சம்பளத்தில் சிறுவர் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்ற நிலைமையும் உரு வாகும்.

உலகலாவிய ரீதியில் சிறுவர் தொழிலாளர் உருவாகுவதைப் பலரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலையில் கொவிட் 19 காரணமாகக் கல்வியை இழந்து நிற்கும் மாணவர்களின் கல்வி கற்கும் உரிமையையும், அவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி இந்தத் திட்டம் முன்வைக்கப் பட வேண்டுமே தவிர, முன்னேற்பாடு இன்றி முன்வைக்கப்படும் இந்தத் திட்டத்தால் பாரிய கல்வி சார்ந்த சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்படும். – எனத் தெரிவித் துள்ளார்.

## புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் ஜனாதிபதி ரணிலுக்கு நன்றி தெரிவித்த டக்ளஸ்!



புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடையை நீக்கு வதற்கான நடவடிக்கை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவிற்கு நன்றி தெரிவிப் பதுடன், ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத்தை நல்லெண்ணச் சமிக்கையாகப் புலம்பெயர் உறவுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கான ஆதரவை எந்தவிதமான சஞ்சலமும் இன்றி துணிச்சலாக வெளிப்படுத்திய ஈ.பி.டி.பி. கட்சி, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் சுமார் 10 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்திருந்தது.

அதில் ஒன்றாகப் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடை நீக்கப்பட வேண்டும் என்பதும் உள்ளடக்கப்பட்டிருந்தது. தடை நீக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத் தைப் புலம்பெயர் உறவுகள் சரியான சந்தர்ப்பமாகப் பயன் படுத்தி, நாட்டில் வாழ்ந்து வருகின்ற தங்களுடைய உறவுகளின் பொருளாதாரப் பலத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்வர வேண்டும். அத்துடன் ஏனைய கோரிக் கைகளும் முன்னுரிமை அடிப்படையிலாயினும் நிறைவேற்றப் படுவதுடன், தடைசெய்யப்பட்டுள்ள முஸ்லீம் அமைப்புக்கள் தொடர் பாகவும் ஆராய்ந்து நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். - எனக் கூறியுள்ளார்.

## எரிபொருள் பதுக்கிவைத்திருந்த குற்றச்சாட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரால் ஒருவர் கைது!




எரிபொருள் பதுக்கி வைத்த குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். முல்லைத்தீவு–புதுக்குடியிருப்பு பிரதேசத் தில் மன்னாகண்டல் பகுதியில் கடந்த சனிக் கிழமை மாலை இந்தக் கைது நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.


மேற்படி சந்தேக நபர் 1590 லீற்றர் டீசலை தனது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.


குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபர் கனரக இயந்திரங்கள், உளவு இயந்திரங்கள், டிப்பர் வாகனங்கள் என்பவற்றை வைத்துப் பாரியளவிலான விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

இதேவேளை வழக்கை பதிவு செய்த புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதாகிய சந்தேக நபரையும் , சான்றுப் பொருள்களையும் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

'மக்களே வீடுகளில் எரிபொருளை சேமித்து வைக்காதீர்கள் , நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டு நிலைமை தொடச்சியாக இருக்கும் நிலையில் வீடுகளில் எரிபொருள்களைத் தேவைக்கு மேலதிகமாக சேமித்து வைக்காதீர்கள். இதனை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நேற்று மட்டு மாவட்டத்திலும் செஞ்சோலை நினைவேந்தல்






2006 ஓகஸ்ட் 14 மஆம் திகதியன்று செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது இலங்கை விமானப்படையின் கிபிர் விமானங்கள் நடாத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட 54 பாடசாலை மாணவிகள் உட்பட 61 பேரின் 16 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்டத்தில் விசேடமாக ஒழுங்குபடுத்தப்பட்ட இடமொன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் நடத்தப்பட்டது.

இந்நினைவேந்தலில் பொதுமக்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ் மற்றும் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.08.2022இல் வெளியிடப்பெற்றது.